Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 358 / 2016** |
| **Deposition of witness for** | **:** | **PW : 8** |
| **Name** | **:** | திருமதி. **K**.**S**.ஷபீனா |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.06.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம், அவிநாசி தாலுகா நீதித்துறை நடுவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015 ம் வருடம் நான் மதுரையில் நீதித்துறை நடுவர் எண்.5 ஆக பணியில் இருந்த போது, பேரையூர் காவல் நிலைய குற்ற எண்.170/2015, பிரிவுகள் 365, 394 இதச வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் பெரியசாமி மகன் கண்ணன், மற்றும் சங்கர் மகன் பாக்கியராஜ் ஆகியோர் மீது அடையாள அணிவகுப்பு நடத்த கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் கடந்த 23.11.2015 ம் தேதியில் முதன்மை நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவு **அதசாஆ.8 ஆகும்.** அதன் பேரில் 27.11.2015 ம் தேதி சாட்சி சின்னத்தாய் அவர்களுக்கு 02.12.2015 ம் தேதி அன்று ஆஜராகும்படி அழைப்பாணை அனுப்பப்பட்டது. **அந்த அழைப்பாணை அதசாஆ.9 ஆகும்.** மேலும் மதுரை, மத்திய சிறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு எதிரிகளைப் போலவே நபர்கள் தேர்வு செய்து வைக்குமாறு வேண்டுதல் கடிதம் அனுப்பப்பட்டது. **சிறைக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அதசாஆ.10 ஆகும்.** அதன் அடிப்படையில் கடந்த 02.12.2015 ம் தேதி மதியம் சுமார் 03.00

மணியளவில் சாட்சி சின்னத்தாய் அவர்கள் மதுரை மத்தியசிறை வெளி வாயில் அருகே ஆஜர் ஆன போது அவரை பேரையூர் காவல்நிலைய ஆய்வளார் அவர்கள் அடையாளம் காட்டினார். அவரிடம் எதிரியை ஏற்கனவே பார்த்துள்ளீரா என்று வினவியபோது, அவர் சம்பவத்தின் போது பார்த்ததாக கூறினார். பின்னர் சாட்சி சின்னத்தாய் அவர்களை எனக்கு உதவியாக வந்த அலுவலக உதவியாளர் கணேஷ்பிரபு அவர்களுடன் சிறைகண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருக்குமாறு கூறினேன். அந்த சிறைகண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து எதிரிகள் நின்ற இடம் தெரியாதவாறு சாட்சியை அமர்த்திவைத்தேன். பின்னர் துணை கண்காணிப்பாளர், தர்மராஜ் அவர்கள், சிறை நீதிமன்ற அறையில் சுமார் 15 கைதிகளை நிறுத்திவைத்திருந்தார். அவர்களில் எதிரிகளைப் போலவே இருந்த 10 கைதிகளை அவர்கள் எண்ணம்போல் வரிசையில் நிற்கவைத்தேன். மேலும் அவர்களின் பெயர் எழுதி அவர்களிடம் கையெழுத்து பெற்றேன். மேற்படி எதிரிகள் இடதிலிருந்து வலதாக எதிரி பாக்கியராஜ் அவர்கள் 5 வது இடத்திலும் எதிரி கண்ணண் 10 வது இடத்திலும் நின்றுகொண்டார்கள். மதியம் 03.00 மணியளவில் சாட்சி சின்னத்தாய் அவர்களை எனது அலுவலக உதவியாளர் மூலம் சிறைகண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து அழைத்து வரச் சொன்னேன். சின்னத்தாய் சிறை அறைக்கு வந்த பின்னர் அவரிடம் நான், சம்பவத்தின் போது இருந்த நபர்கள் இங்கு உள்ளார்களா என்று தொட்டு அடையாளம் காட்டுமாறு தெரிவித்தேன். அதன்பின்னர் மேற்படி சாட்சி சின்னத்தாய் அவர்கள் 10 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த எதிரி கண்ணன் அவர்களை தொட்டு அடையாளம் காட்டினார். ஆனால் 5 வது இடத்தில் நின்றுகொண்டிருந்த எதிரி பாக்கியராஜ் அடையாளம் காட்டவில்லை. எனவே, சாட்சியை மீண்டும் சிறைகண்காணிப்பளார் அலுவலகத்திற்கு எனது அலுவலக உதவியாளருடன் மறைவாக இருக்குமாறு அனுப்பிவைத்தேன். அதன் பின்னர் எதிரிகளை மறுபடியும் அவர்களுக்குள் கலந்து நிற்குமாறும், அவர்களுக்குள் சட்டையை மாற்றிக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் எதிரி கண்ணன் அவர்கள் விசாரணை கைதி மாடசாமி மகன் பிரசாந்த் அவர்களின் சட்டையையும், எதிரி பாக்கியராஜ் அவர்கள் விசாரணை கைதி ராஜகொடி மகன் பிரேம்குமார் அவரின் சட்டையையும் மாற்றிக் கொண்டார்கள். மேலும் எதிரி கண்ணன் இடதிலிருந்து வலதாக 7 ம் இடத்திலும், எதிரி பாக்கியராஜ் 12 ம் இடத்திலும் நின்றுகொண்டார்கள். பின்னர் சாட்சி சின்னத்தாய் அவர்களை சிறைகண்காணிப்பாளர் அலுவலகத்தின் மறைவான இடத்தில் இருந்து எனது அலுவலக உதவியாளர் மூலம் எதிரிகள் நின்றுகொண்டிருந்த சிறை அறைக்கு அழைத்துவரப்பட்டார். அவரிடம் சம்பவத்தின் போது இருந்த நபர்களை தொட்டு அடையாளம் காட்டுமாறு கூறப்பட்டது. அதன்அடிப்படையில் சாட்சி சின்னத்தாய் அவர்கள் எதிரி கண்ணனை தொட்டு அடையாளம் காட்டினார். ஆனால் எதிரி பாக்கியராஜ் அவர்களை தொட்டு அடையாளம் காட்டவில்லை. பின்னர் சாட்சி மீண்டும் எனது அலுவலக உதவியாளர் மூலம் சிறைகண்காணிப்பளார் அலுவலகத்தில் மறைவான இடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். ஏற்கனவே சாட்சி எந்த ஒரு உறுத்தலும் இல்லாமல் எதிரி கண்ணனை அடையாளம் காட்டியும், எதிரி பாக்கியராஜ்-ஐ அடையாளம் காட்டாததால் மூன்றாவதாக அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை. பின்னர் மற்ற விசாரணை கைதிகளை அனுப்பிவைத்துவிட்டு பின்னர் எதிரி கண்ணனிடம் அடையாளம் அணிவகுப்பு பற்றி வினவிய போது அவர் காவல்நிலையத்தில் வைத்து தன்னை புகைப்படம் எடுத்தார்கள் என்றும் சின்னத்தாய் வீட்னரும் புகைப்படம் எடுத்ததாகவும் வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்று சொன்னார். அதை நான் எனது கைப்பட எழுதிக்கொண்டு எதிரி கண்ணனிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி பாக்கியராஜ் இடம் அடையாள அணிவகுப்பு பற்றி வினவிய போது, அவர் தன்னை காவல் நிலையத்தில் வைத்து புகைப்படம் எடுத்ததாகவும், தனக்கு பயமாக இருப்பதாகவும், வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்று கூறியதை நான் எனது கைப்பட எழுதிக்கொண்டு அவரிடம் கையெழுத்து பெற்றேன். பின்னர் சாட்சியை அனுப்பிவைத்துவிட்டேன். எனது அடையாள அணிவகுப்பை 03.45

மணியளவில் முடித்துவிட்டேன். பின்னர் எனது அறிக்கையை தயார் செய்தேன், 02.12.2015ம் தேதியிட்ட **எனது அடையாள அணிவகுப்பு அறிக்கை அதசாஆ. 11 ஆகும்.** அத்துடன் சந்தேக எதிரிகள் கண்ணன் மற்றும் பாக்கியராஜ் மற்ற எதிரிகளின் விவரப்பட்டியல் மற்றும் சந்தேக எதிரிகள் இருவரும் அடையாள அணிவகுப்பிற்கு பிறகு கொடுத்த பதிவுகள் எனது அறிக்கையுடன் இணைத்துள்ளேன். அதன் பிறகு எனது அறிக்கையை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், பேரையூர் அவர்களுக்கு 05.12.2015ம் தேதி மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

1:8 விகித அடையாள அணிவகுப்பிற்கு நான் பயன்படுத்தவில்லை என்றால் அது அவசியம் இல்லை என்பதால் நான் பயன்படுத்தவில்லை. நான் 12 நபர்களை பயன்படுத்தினேன். சந்தேக எதிரிகளுடன் நிற்கவைத்திருந்த மற்ற கைதிகளின் வயதினை நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை. அது தேவைப்படவில்லை என்பதால் குறிப்பிடவில்லை. எதிரி பாக்கியராஜ் என்பவரின் தகப்பனார் பெயர் சங்கர் என்பதற்கு பதிலாக பெரியசாமி என்று தவறுதலாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். சாட்சி சின்னத்தாயை அடையாள அணிவகுப்பிற்கு முன்பு நான்அவரைப்பற்றி செய்த விசாரணைகள் குறித்து நான் வாக்குமூலமாக பதிவு செய்யவில்லை. இந்திய சாட்சிய சட்டப்படி அடையாள அணிவகுப்பு முறையாக நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை